**IN THE COURT OF ASSISTANT SESSIONS COURT, MUDUKULATHUR**
**Sessions Case No.99/2022**

அ.சா.3

**Deposition of witness for Prosecution**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.சண்முகராசு |
| **Father Name** | : | திரு. கருப்பையா |
| **Village** | : | சாயல்குடி |
| **Taluk** | : | கடலாடி |
| **Calling** | : | ஓட்டுநர் |
| **Age** | : | 51 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1944 of the day of 01.08.2023**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக குவிநமுச பிரிவு 317 படியான மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.**

**4ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. வழக்கு தொடர்பான சம்பவம் தெரியாது. என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

(சாட்சியானவர் 161(3) குவிமுச வாக்குமூலத்திற்கு மாற்றமாக சாட்சியம்அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)

குறுக்குவிசாரணை

கடந்த 09.01.2021ம் தேதி அதிகாலை 3 மணியளவில் வடக்கு மூக்கையூருக்கு மீன் வாங்க சென்றேன். அப்போது அங்கு உள்ள அரக்காசு அம்மன் கோவில் அருகே நான் சென்றபோது பின்னால் பெயர் விலாசம் தெரிந்த புல்லந்தை இருப்பு மேலச்செல்வனூரைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் மகன் செந்தில்குமார் நோம்பக்குளத்தைச் சேர்ந்த செந்தில் மகன் வினித் முருகன், முத்துராமலிங்கபுரத்தைச் சேர்ந்த மாடசாமி மகன் முனீஸ்வரன் புல்லந்தையைச் சேர்ந்த சரவணன் ஆகியோர்கள் திருட்டுத்தனமாக செவக்காட்டு வழியாக டி என் 65 ஏவி 2614 எம் எப் என் டிராக்டரில் ஆற்று மணலை அள்ளிக்கொண்டு வந்தவர்களை சாயல்குடி காவல்நிலைய தலைமைக் காவலர் செந்தூர்பாண்டி காவலர் சக்தி கணேசன் ஆகியோர்கள் தடுக்க முற்பட்டார்கள் என்று சொன்னால் தெரியவில்லை. அப்பொழுது செந்தில்குமார் வினித்தைப் பார்த்து வண்டியை நிறுத்தாதே என்றும்,

போலீஸ்காரர்களை ஏற்றி கொல்லுடா என்றும் கத்தினார் என்று சொன்னால் சரியல்ல. முனீஸ்வரனும், சரவணனும் போலீஸ்காரர்களை ஏற்றி கொல்லுங்கடா என்று சொன்னார் என்றும், எதிரி வினித் டிராக்டரை வேகமாக ஓட்டி போலீசார் மீது ஏற்ற வந்தார் என்று சொன்னால் சரியல்ல. செந்தில்குமார் போலீசாரை கையால் அடித்து டிராக்டரை கொண்டு தள்ளிவிட்டார் என்றும், போலீசார் இருவரும் தப்பித்து ரோட்டில் விழுந்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. டிராக்டரை ஏற்றியிருந்தால் அவர் இறந்திருப்பார் என்றும், தலைமைக் காவலர் செந்தூர்பாண்டி எழுந்து வண்டியை துரத்தி சென்றார் என்றும், எதிரி வினித்தும், சரவணனும் வண்டியிலிருந்த மணலை எடுத்து காவலர் செந்தூர்பாண்டி மீது எறிந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மண்வெட்டி கணையால் செந்தூர்பாண்டி மீது செந்தூர்பாண்டி இரண்டு கைகளிலும் அடித்து ரோட்டில் தள்ளிவிட்டார் என்றும், அவர் கீழே விழுந்ததில் அவரின் இடது கால் பாதத்திற்கு மேல் இரத்தக்காயமும், இரண்டு கை மற்றும் உள்ளங்கையில் சிராய்ப்புக்காயமும் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு எதிரிகள் அனைவரும் ஓடிவிட்டார்கள் என்றும், நானும், சாயல்குடி அண்ணாநகரைச் சேர்ந்த கோவிந்தனும் மற்றும் காவலர் சக்தி கணேசனும் காயம்பட்ட தலைமைக்காவலர் செந்தூர்பாண்டியை தூக்கிவிட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.